# Work has commenced to provide Internet connectivity to all the GPs in TN.



## ஊராட்சிகளுக்கு இணைய இணைப்பு: 'பாரத் நெட்' திட்டப் பணிகள் தொடக்கம்

சென்னை, ஏப்.25: தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் இணைய இணைப்பு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை கையெழுத்தானது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு: கிராம ஊராட்சிகளை இணையம் மூலம் இணைப்பதற்கான பாரத்நெட் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதன்படி, தமிழகத்திலுள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளும் கண்ணாடி இழை கேபிள் மூலம் இணைக்கப்பட்டு அரசின் பல்வேறு சேவைகளைப் பொதுமக்கள், தங்கள் கிராமங்களில் இருந்தே இணையம் மூலமாகப் பெற்றுப் பயனடையலாம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென 'தமிழ்நாடு கண்ணாடி இழை வலைக் கழகம்' என்ற தனி அமைப்பு உருவாக்கப்படும் என மறைந்த முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு கண்ணாடி இழை வலைக் கழகம் உருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது. இந்த நிறுவனத்துக்கு அரசின் பங்கு முதலீடாக ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட்டு நிறுவனத்தைப் பதிவு செய்வதற்கான ஆரம்ப கட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மத்திய-மாநில அரசுகளுக்கு இடையேயான கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை பரிமாறப்பட்டது.

தமிழகத்தில் பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் தமிழ்நாடு அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, அமைச்சர் மணிகண்டன் முன்னிலையில் ஒப்பந்தத்தை பரிமாறும் அதிகாரிகள்.

**<u>Internet connectivity to GPs</u>**

Commencement of BharatNet Project.

Work has commenced to provide Internet connectivity to all the GPs in TN.

A MoU has been signed at the Secretariat on Tuesday.

According to the press release of the Govt. of TN:

The Govt. of India is implementing BharatNet to connect all the villages over internet. Accordingly, all the 12,524 GPs in TN would be connected through Optical fibre and various government services would be delivered to the public. People can avail all the services through internet from their villages. Late Ms. Jayalalitha, CM, had announced that Tamil Nadu FiberNet Corporation has been formed to implement this project.

According to that announcement, a G.O was issued to form TANFINET Co. Govt's contribution of Rs.50 Lakhs has been released for TANFINET and steps are on to register the Co and take up the preliminary works.

The MoU signed between the Central & State Govts has been exchanged in the presence of Shri Edappadi K. Palaniswami, Chief Minister of TN, at the Secretariat, on Tuesday.

M/s TACTV is involved in the formulation of Detailed Project Report for implementing Bharat Net in TN. Shri M. Manikandan , Minister (IT) and Ms. Girija Vaidyanathan, Chief secretary were among the participants.